# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

**19- A, Rukmini Lakshmipathy Salai, (Marshal Road),**
**Egmore, Chennai – 600 008.**
**Phone : ++91-044-2841 1376 / 2841 1378/ 2841 1379 Fax : ++91-044-2841 1377**
**Email : tnercmail@gmail.com Web site : www.tneo.gov.in**


**முன்னிலை : திரு.ஆ. தர்மராஜ், மின்குறை தீர்ப்பாளர்**

மேல் முறையீட்டு மனு எண் 15 / 2016

திரு. S. விசாலாட்சி, B.A.,
க/பெ V.S. சந்தானம், M.sc., M.Phil.,
வெள்ளையனிருப்புத் தெரு,
பூம்புகார்,
நாகப்பட்டிணம் ..... மேல்முறையீட்டாளர்
(திரு. மணி)

எதிர்

மேற்பார்வை பொறியாளர்,
திருவாரூர் மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
73–c, துர்காலயா ரோடு,
திருவாரூர் – 610 001.

. . . . . எதிர் மனுதாரர்
(திரு. S. சதீஸ்குமார், செயற் பொறியாளர்/திருவாரூர் &
திரு. A கணேசன், இளநிலை பொறியாளர்/குடவாசல்)

**கேட்புரை நாள் : 25–5–2016**

**ஆணை நாள் : 10–6–2016**

திருமதி. S. விசாலாட்சி, க/பெ சந்தானம், பூம்புகார் அவர்களின் 19.2.2016 நாளிட்ட மனு, மேல்முறையீட்டு முனு எண்.15/2016 ஆக பதிவு செய்யப்பட்டது. மேற்கூறிய மேல்முறையீட்டு மனு மீது மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை 25.5.2016 அன்று நடத்தப்பட்டது. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள், எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள் மற்றும் இருதரப்பினராலும் கேட்புரை நாளில் எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள் அனைத்தையும் ஆராய்ந்து மின்குறைதீர்ப்பாளரால் கீழ்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

## ஆணை

## 1. மேல்முறையீட்டாளரின் கோரிக்கை

மேல்முறையீட்டாளருக்கு சொந்தமான கல்யாண மண்டபத்திலுள்ள மின்இணைப்பை துண்டிக்க வேண்டும் என்று கோரியுள்ளார்.

## 2. வழக்கின் சுருக்கம்

2.1 குடவாசல் தாலுக்கா, ஓகை கிராமத்தில் அமைந்துள்ள திருமண மண்டபத்தின் பயன்பாட்டில் உள்ள மின்இணைப்பு எண்.567–057–409 ஆகும்.

2.2 மேல்முறையீட்டாளர் மேற்கண்ட வளாகம் பழுதடைந்துள்ளதால் மேற்கண்ட மின்இணைப்பை துண்டிப்பு செய்ய கோரியுள்ளார்.

2.3 இளமின் பொறியாளர், குடவாசல் அவர்கள் மின்துண்டிப்பு செய்வதற்கு திரு. முத்துப்பிள்ளை என்பவர் மேற்கண்ட திருமண மண்டபம் தன்னுடைய பராமரிப்பில் உள்ளது என்று தெரிவித்து ஆட்சேபனை செய்துள்ளார். மேலும், நன்னிலம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அனுபவம் சம்பந்தமான வழக்கு நிலுவையில் உள்ளது என்றும் தெரிவித்துள்ளதால் மின்இணைப்பை துண்டிக்கவில்லை.

2.4 எனவே, மேல்முறையீட்டாளர் திருவாரூர் மின்பகிர்மான வட்டத்தின் மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்திற்கு மனு செய்துள்ளார்.

2.5 மன்றம் தன்னுடைய தீர்வை 2.2.2016 நாளிட்ட ஆணையில் தெரிவித்துள்ளது. மேற்கண்ட ஆணையில் அதிருப்தியுற்ற மேல்முறையீட்டாளர் இந்த மேல்முறையீட்டு மனுவை மின்குறைதீர்ப்பாளர் முன்பாக சமர்ப்பித்துள்ளார்.

## 3. மன்றத்தின் தீர்வு

3.1 திருவாரூர் மின்பகிர்மான வட்டத்தின் மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தின் 2.2.2016 நாளிட்ட ஆணையின் சம்பந்தப்பட்ட பத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*“தீர்ப்பு*

*விசாரணையின் அடிப்படையில் கீழ்கண்டவாறு தீர்ப்பு அளிக்கப்படுகின்றது. கிராம நிர்வாக அலுவலர், அரசூர் கிராமம் அளித்த சான்றிதழை ஆய்வு செய்த பொழுது திரு. முத்துப்பிள்ளை, த/பெ சண்முகம் பிள்ளை, ஓகை கிராமம் அவர்கள் உடைமையில் மேற்கண்ட மின்இணைப்புள்ள திருமண மண்டபம் உள்ளது தெரியவந்தது. மின்கட்டண விவரத்தை ஆய்வு செய்தபொழுது இதுநாள் வரை மின்பயனீட்டில் உள்ளதும் தெரிய வருகிறது மேலும், மனுதாரர் மேற்கண்ட திருமண மண்டபம் கடந்த 2014 முதல் பாதுகாப்பு சான்று பெற இயலாத காரணத்தினால் மண்படம் பயன்பாட்டில் இல்லை என மாறான*

*தகவலை தெரிவித்துள்ளார். வழக்கு ஆவணங்களை ஆய்வு செய்த பொழுது திரு. முத்துப்பிள்ளை அவர்களுக்கும் திருமதி. விசாலாட்சி அவர்களுக்குமிடையே மின்இணைப்பு எண்.567–057–409* (TF V) *அமைந்துள்ள திருமண மண்டபம் இடம் தொடர்பாக நீதிமன்ற வழக்கு நிலுவையில் உள்ளதால் மேற்படி மின் இணைப்பை மின்துண்டிப்பு செய்ய இயலாது என்ற இளமின் பொறியாளர்/இ–பரா/குடவாசல் அவர்களது கூற்றை இம்மன்றம் ஒருமனதாக ஏற்றுக் கொள்கிறது"*

**4. <u>மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள்</u>**

**4.1** 22.10.2015 அன்று திருவாரூர் மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தில் புகார் செய்யப்பட்டு அவர்களது புகார் 2.2.2016 அன்று திருவாரூரில் விசாரிக்கப்பட்டு குடவாசல் இளமின் பொறியாளர் அவர்கள் செய்த முறையீட்டை ஏற்று அவர்கள் முறையீட்டினை எழுத்துபூர்வமாக கொடுத்தும் ஏற்காமல் அவர்களது கோரிக்கை ஏற்காமல் மின்துண்டிப்பு செய்யவில்லை.

**4.2** மன்ற முறையீட்டாளர் அவர்கள், மன்றம் அளித்த பதில் திருப்தி ஏற்படாமல் உள்ளதால் மின்குறைதீர்ப்பாளர் அவர்களுக்கு இதன் மூலம் மேல்முறையீடு விசாரணைக்காக செய்துள்ளார்கள். அவர்கள் முறையீட்டினை விசாரணை செய்து மின்துண்டிப்பு செய்ய உத்தரவிட வேண்டுகிறார்.

**5. <u>எதிர்மனுதாரரின் பதிலுரை</u>**

**5.1** குடவாசல் தாலுக்கா ஒகை கிராமத்தில் திருமதி. விசாலாட்சி பெயரிலுள்ள திருமண மண்டபம் வளாகத்தில் பயன்பாட்டில் உள்ள மின்இணைப்பு எண்.567–057–409 பழுதடைந்துள்ளதால் மின் துண்டிப்பு செய்திட கோரியுள்ளார்.

**5.2** இளமின் பொறியாளர்/இயக்குதலும் பராமரித்தலும் குடவாசல் அவர்கள் மின்துண்டிப்பு செய்ய ஆட்சேபனை உள்ளதால் மின்துண்டிப்பு செய்திட இம்மன்றம் ஆணையிட விண்ணப்பித்து அதனடிப்படையில் கடந்த 2.2.2016 மன்றம் கூட்டப்பெற்று விசாரணை மேற்கொண்டு கீழ்கண்ட தீர்ப்பினை வழங்கியுள்ளது.

**5.3** மின் நுகர்வோர் கோரியபடி மேற்படி மின்இணைப்பு எண்.567–057–409ஐ (TF-V) மின் துண்டிப்பு செய்ய சென்றபொழுது திரு. முத்துப்பிள்ளை, த/பெ சண்மகம் பிள்ளை, ஒகை கிராமம் அவர்கள் மின் துண்டிப்பு செய்ய கூடாது என ஆட்சேபனை தெரிவித்துள்ளார். மேற்படி மின் இணைப்பு அமைந்துள்ள இடம் மற்றும் மின்இணைப்பு உள்பட நன்னிலம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.101/13 வழக்கு

நிலுவையில் இருப்பதாலும் மேற்கண்ட மின்இணைப்பிற்குரிய மின்கட்டணங்கள் முறையாக செலுத்தப்பட்டு வருவதாலும் மின் துண்டிப்பு செய்ய இயலவில்லை.

## 6. மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை

6.1 மேல்முறையீட்டாளரும், எதிர்மனுதாரரும் தங்களது தரப்பு வாதங்களை நேரில் எடுத்துரைப்பதற்கு வசதியாக 25.5.2016 அன்று மின்குறைதீர்ப்பாளரின் முன்பு கேட்புரை நடத்தப்பட்டது.

6.2 மேல்முறையீட்டாளரின் சார்பில் திரு. C. மணி, அவர்கள் கலந்து கொண்டு தன்னுடைய தரப்பு வாதத்தை எடுத்துரைத்தார்.

6.3 எதிர்மனுதாரர் சார்பாக திரு. S. சதீஸ்குமார், செயற் பொறியாளர்/திருவாரூர் மற்றும் திரு. A. கணேசன் இளமின்பொறியாளர்/குடவாசல் ஆகியோர் கலந்து கொண்டு தங்களுடைய தரப்பு வாதங்களை எடுத்துரைத்தனர்.

## 7. மேல்முறையீட்டாளரின் பிரதிநிதி கேட்புரை நாளில் எடுத்துரைத்த வாதங்கள்

7.1 மேல்முறையீட்டாளரின் சார்பில் திரு. C. மணி அவர்கள் கலந்து கொண்டு தன்னுடைய தரப்பு வாதத்தை எடுத்துரைத்தார்.

7.2 மேல்முறையீட்டளருக்கு சொந்தமான கைலாச நாதர் தெற்கு வீதி கதவிலக்கம் 15ல் உள்ள திருமண மண்டபம் மிகவும் பழுதடைந்து உள்ளதால் கட்டிடத்தை இடித்து புதியதாக கட்டவேண்டும் என்பதால் மின்இணைப்பு எண்.567–057–409ஐ துண்டிக்க கோரி 22.8.2014 இள மின்பொறியாளர், ஓகை அவ்ாகளுக்கு மனு செய்யப்பட்டது. அவர் மின்துண்டிப்பு செய்ய முடியாது என்று 30.8.2014ல் பதில் அனுப்பியுள்ளார்.

7.3 மேற்பார்வை பொறியாளர், திருவாரூர் மின்பகிர்மான வட்டத்திற்கும் இது சம்பந்தமாக 2.9.2014 அன்று புகார் அனுப்பப்பட்டது. மேலும், 30.1.2015 அன்று இதுசம்பந்தமாக வழக்கறிஞர் மூலமாகவும், ஒரு அறிவிப்பு கொடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்து அதன் நகலையும் அளித்துள்ளார்.

7.4 மேற்கண்ட மின்இணைப்பை மின்துண்டிப்பு செய்ய சென்றபொழுது, திரு. முத்துப்பிள்ளை அவர்கள் மேற்கண்ட மண்டபத்தின் அனுபவம் சம்பந்தமாக வழக்கு எண்.101/2013 நிலுவையில் உள்ளதால், மின்இணைப்பை மின்துண்டிப்பு செய்ய ஆட்சேபணை தெரிவித்துள்ளதால் நடவடிக்கை எதுவும் எடுக்க முடியாது என்று இளமின் பொறியாளர் 12.2.2015 நாளிட்ட கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

7.5 மேல்முறையீட்டாளரின் பிரதிநிதி மேற்கண்ட திருமண மண்டபம் வருவாய் கோட்ட அலுவலரால் ஆய்வு செய்யப்பட்டு மேற்படி திருமண மண்டபத்தில் பொது நிகழ்ச்சிகள் நடத்த உரிமை பெற வேண்டும் என்றும், கட்டிடத்தின் உறுதிதன்மை குறித்து பொறியாளரிடம் சான்று பெற வேண்டும் என்றும் மேற்கண்ட திருமண மண்டபத்தில் பொது நிகழ்ச்சிகள் மற்றும் திருமண நிகழ்ச்சிகள் ஏதும் நடத்த கூடாது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்து வருவாய் கோட்ட அலுவலரின் 15.10.2015 நாளிட்ட கடிதத்தின் நகலை சமர்ப்பித்துள்ளார்.

7.6 மேலும், வழக்கு எண்.101/2013 நிலுவையில் உள்ளது என்றும், ஆனால் அந்த வழக்கில் தடை உத்தரவு எதுவும் பிறப்பிக்கப்படவில்லை என்பதால் மின்இணைப்பு துண்டிக்க தடையேதும் இல்லை என்றும் வாதிட்டார்.

7.7 மேலும், மேல்முறையீட்டாளரின் பெயரில் உள்ள மின் இணைப்பின் ஒப்பந்தத்தை முறிக்க வேண்டும் (Termination of agreement) என்று உரிமையாளர் கோரும் பொழுது விதிகளின்படி ஒப்பந்தத்தை முறிக்க வேண்டியது உரிமதாரரின் கடமை என்றும் வாதிட்டார்.

7.8 எதிர்மனுதாரர் தெரிவிப்பது போல் திரு. முத்துப்பிள்ளை அந்த மின்இணைப்பு உள்ள வளாகத்தில் குடியிருக்க வில்லை என்றும் வாதிட்டார்.

## 8. <u>எதிர்மனுதாரர் கேட்புரை நாளில் எடுத்துரைத்த வாதங்கள்</u>

8.1 எதிர்மனுதாரர் சார்பில் கலந்து கொண்ட திரு. சதீஸ்குமார், செயற்பொறியாளர்/திருவாரூர் அவர்கள் எதிர்மனுதாரது பதிலுரையில் உள்ள வாதங்களை மீண்டும் வலியுறுத்தினார்.

8.2 எதிர்மனுதாரரின் பிரதிநிதி மேற்கண்ட திருமண மண்டபத்தில் உள்ள மின் இணைப்பை துண்டிக்க வேண்டும் என்ற பொழுது திரு. முத்துப்பிள்ளை த/பெ சண்முகம் பிள்ளை ஓகை கிராமம் அவர்கள் ஆட்சேபனை செய்துள்ளார் என்று தெரிவித்தார்.

8.3 மேலும், திரு. முத்துப்பிள்ளை அந்த வளாகத்தின் ஒரு பகுதியில் அவர் குடியிருந்து வருவதால் அந்த மின்இணைப்பை துண்டிப்பதால் அவரின் அடிப்படை உரிமையை பாதிக்கும் என்று அவர் வாதிடுவதாகவும் தெரிவித்தார்.

8.4 திரு. முத்துப்பிள்ளை அவர்கள் மேற்கண்ட மின்இணைப்பு உள்ள திருமண மண்டபம் அவரின் சொந்த பராமரிப்பிலும் அனுபவத்திலும் 20 ஆண்டுகளாக இருந்து வருகிறது என்றும் மேலும், அந்த திருமண மண்டபத்தின் அனுபவம் சம்பந்தமாக நன்னிலம்

நீதிமன்றத்தில் வழக்கு எண்.101/2013 நிலுவையில் உள்ளது என்று தெரிவித்துள்ளார் என்றும் வாதிட்டு வழக்கில் திரு. முத்துப்பிள்ளை தாக்கல் செய்துள்ள அபிடவிட்டின் நகலையும் சமர்ப்பித்துள்ளார்.

8.5 எதிர்மனுதாரர் பிரதிநிதி மேற்கண்ட மின்இணைப்பின் மின்கட்டணம் சரியாக செலுத்தப்பட்டு வருவதால் அதனை மின்துண்டிப்பு செய்ய முடியாது என்றும் வாதிட்டார்.

8.6 திரு. முத்துப்பிள்ளை அவர்கள் 2008–2009 முதல் 2012–2013 வரையிலான ஆண்டுகளுக்கு மேற்கண்ட மண்டபத்திற்கு வரி செலுத்தியுள்ளார் என்பதற்கு ஆதாரமாக நிர்வாக அலுவலர் தேர்வு நிலை பேரூராட்சி குடவாசல் அளித்துள்ள சான்றின் நகலையும் செயற்பொறியாளர் சமர்ப்பித்துள்ளார்.

8.7 மேலும், நன்னிலம் நீதிமன்றத்தில் மேற்கண்ட திருமண மண்டபம் உள்ள சொத்து சம்பந்தமான வழக்கு நிலுவையில் உள்ளதாலும் அந்த சொத்தில் உள்ள மின்இணைப்பு எண்ணும் வழக்கு உள்ள சொத்தில் சேர்க்கப்பட்டுள்ளதால் நீதிமன்ற தீர்ப்பின்படி விதிகளுக்கு உட்பட்டு மேல் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் வாதிட்டுள்ளார்.

9. <u>மின்குறைதீர்ப்பாளரின் தீர்வு</u>

9.1 இருதரப்பு வாதங்களையும் ஆராய்ந்து பார்க்கும்பொழுது மின்இணைப்பு எண்.567–057–409 உள்ள திருமண மண்டபம் அனுபவம் சம்பந்தமாக நன்னிலம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு எண்.101/2013 நிலுவையில் உள்ளது என்று தெரிகிறது. எனவே, நான் மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறைவிதிகளின் விதி 17(4)(d) ஐ ஆராய விரும்புகிறேன். அந்த விதி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*17. xxx xxx xxxxx*
*(4) No Complaint to the Electricity Ombudsman shall lie unless :*
*(a) xxx xxx xxx*
*(b) xxx xxx xxx*
*(c) xxx xxx xxx*
*(d) The complaint does not pertain to the same subject matter for which any proceedings before any court is pending or a decree or award or a final order has already been passed by any competent court; and*
*(e) xxx xxx xxx*

9.2 மேற்கண்ட விதி 17(4)(d) கூர்ந்து படிக்கும்பொழுது நாம் அறிவது முறையீட்டாளரின் புகாரில் உள்ள நுதல்பொருள் (subject matter) சம்பந்தமாக வழக்கு ஏதாவது நீதிமன்ற

நடவடிக்கையில் நிலுவையில் இருந்தாலோ அல்லது அப்பொருள் மீது தக்க அதிகாரம் பெற்ற நீதிமன்றம் ஏற்கனவே கட்டளையோ தீர்ப்போ இறுதி ஆணையோ வழங்கியிருந்தாலோ அத்தகை முறையீட்டினை மின்குறைதீர்ப்பாளரால் ஏற்றுக் கொள்ள முடியாது என்று தெரிகிறது.

**9.3** நன்னிலம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் நிலுவையிலுள்ள வழக்கு எண்.101/2013ல் உள்ள கோரிக்கை என்ன வென்று தெரிந்து கொள்ள அந்த வழக்கின் மனுதாரரின் கோரிக்கையை ஆராய வேண்டும். அந்த வழக்கின் 1வது வாதியான திரு. முத்துப்பிள்ளை (இந்த மின்இணைப்பை துண்டிக்க ஆட்சேபனை செய்பவர்) அவர்களின் அபிடவிட்–ஐ ஆராய வேண்டும். அதிலுள்ள தகவல்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

<u>மனுதாரர்/வாதி</u>

(1) முத்துப்பிள்ளை, த/பெ சண்முகம் பிள்ளை

(2) செந்தில், த/பெ முத்துப்பிள்ளை

<u>எதிர்மனுதாரர்கள்</u>

(1) மாலதி, க/பெ மணி

(2) விசாலாட்சி, க/பெ சந்தானம்,

(3) மண்ணெண்ணெய் குமார், த/பெ ரெங்கநாதன்

*xxx xxx xxx*
*xxx xxx xxx*

*4. எங்கள் அனுபவம் பிரதிவாதிகளால் சட்டப்படியாக எங்களிடம் இருந்து எடுக்கப்படும் நாள்வரையில் நாங்கள் வழக்கு சொத்தினை அனுபவிப்பதில் பிரதிவாதிகளோ அவர்களது ஆட்களோ ஏஜென்டோ எவ்வித இடையூறும் செய்யக்கூடாது என நிரந்தர தடை உறுத்துக்கட்டளை பரிகாரம் கேட்டு நாங்கள் இவ்வழக்கிட்டுள்ளோம். எப்போதும் தடுக்க இயலாது என்பதால் தற்காலிக இடைக்கால தடைஉறுத்துக்கட்டளை வழங்க வேண்டியது அவசியமாக உள்ளது. வழக்குரையில் எங் களது ஆவணங்கள் தாக்கல் செயயப்பட்டுள்ளது. தாவாபடி தீர்ப்பாக வேண்டுகிறேன். நாங்கள் முதல் தரமான வழக்கினை முன்வைத்துள்ளோம் எங்களுக்கு சாதகமாக தீர்ப்பு ஏற்படும் சூழ்நிலையும் உள்ளது. இந்த மனு அனுமதிக்காவிடில் எங்களுக்கு பெருத் நஷ்டமும் ஏற்படும். மாறாக அனுமதிப்பதால் எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித கஷ்டமோ நஷ்டமோ இல்லை.*

*5. எனவே, சமூகம் கோர்ட்டார் அவர்கள் அருள்கூர்ந்து இந்த வழக்கில் இருதரப்பு வாதுரை கேட்டு இறுதியாக தீர்ப்பு கூறும் நாள்வரையிலும், இந்த மனுவில் இருதரப்பு வாதுரை கேட்டு இறுதியாக உத்தரவு பிறப்பிக்கும் நாள் வரையிலும் எனது உடமையிலும் அனுபவத்திலும் உள்ள 1ம் அயிட்ட சொத்தில் எனது அனுபவம் சட்டப்படியாக நீக்கப்படும் நாள் வரையில் பிரதிவாதிகளோ அவர்களது ஆட்களோ ஏஜென்டோ எனது அனுபவத்தில் எவ்வித இடையூறும் செய்யக்கூடாதெனவும், 2ம் வாதியாகிய எனது மகன் அனுபவத்தில் உள்ள வழக்கு 2ம் அயிட்ட சொத்தில் எனது மகனின் அனுபவம் சட்டப்படியாக நீக்கப்படும் வரையில் பிரதிவாதிகளோ அவர்களது ஆட்களோ ஏஜென்டோ எவ்வித இடையூறும் செய்யக்கூடாது எனவும் தற்காலிக இடைக்கால தடை உறுத்துக் கட்டளை வழங்க உத்தரவிட வேண்டியது அவசியமாகவும் நியாயமாகவும் உள்ளது.*

*<u>சொத்து விபரம்</u>*

*<u>முதல் அயிட்ட சொத்து விபரம் (1ம் வாதியுடையது)</u>*

*1. நன்னிலம் டி.மு. இலாக்கா குடவாசல் தாலுக்கா 50 அரசூர் வருவாய் கிராமம் கைலாசநாதர் தெற்குவீதி கீழஓகையில் அமைந்துள்ள புல எண்.106/2ல் உள்ள 10 சென்ட் மனை அதிலுள்ள சண்முகபிள்ளை திருமண மண்டபம் பின்கொல்லை, மரம் தழைவகையாறா உள்பட மின்இணைப்பு எண்.409 உள்பட*

*2. நன்னிலம் டி.மு.இலாக்கா குடவாசல் தாலுக்கா 50 அரசூர் வருவாய் கிராமத்தில் புல எண்.32/ஏ3ஏ வில் அளவாகியுள்ள 0.74.0 ஏர்ஸ் நஞ்சையில் தென்புறம் 0.13.0 ஏர்ஸ்.*

*xxx xxx xxx*

9.4 மேற்கண்ட தகவல்களின்படி திரு. முத்துப்பிள்ளை அவர்கள் புல எண்.106/2ல் அமைந்துள்ள சண்முகம் பிள்ளை திருமண மண்டபம், பின்கொல்லை, மரம், தழைவகையறா மின்இணைப்பு எண்.409 உள்பட உள்ள சொத்தில் இருதரப்பு வாதுரை கேட்டு இறுதியாக தீர்ப்பு வழங்கும் வரையிலும் அவரது உடமையிலும் அனுபவத்திலும் உள்ள சொத்தில் அவரது அனுபவம் சட்டபடியாக நீக்கும் வரை நாள்வரையிலும் பிரதிவாதிகளோ அவரது ஆட்களோ ஏஜென்டோ அவரது அனுபவத்தில் எவ்வித இடையூறும் செய்யக்கூடாது என தற்காலிக இடைக்கால தடை உறுத்துக்கட்டளை வழங்க

வேண்டும் என்று கோரியுள்ளார் என்று தெரிகிறது. மேலும், அந்த சொத்தில் உள்ள மின்இணைப்பு தனியாக தெரிவிக்கப்பட்டுள்ளதால் அதற்கும் சேர்த்துதான் வழக்கு உள்ளது என்று தெரிகிறது.

**9.5** எனவே, மேற்கண்ட திருமண மண்டபத்திற்கும் அதிலுள்ள மின் இணைப்பிற்கும் அனுபவம் சம்பந்தமாக வழக்கு நன்னிலம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு எண்.101/13 நிலுவையிலுள்ளது என்று தெரிகிறது.

**9.6** மேற்கண்ட மின் இணைப்பைத்தான் என் முன்னால் உள்ள மேல்முறையீட்டு மனு எண்.15/2016ல் உள்ள வழக்கில் மேல்முறையீட்டாளர் மின்துண்டிப்புசெய்யவேண்டும் என்று கோரிக்கை வைத்துள்ளார்.

**9.7** மேற்கண்ட மின்இணைப்பு மற்றும் அது அமைந்துள்ள வளாகம் ஆகியவற்றின் அனுபவம் சம்பந்தமாக வழக்கு எண்.101/2013 நன்னிலம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளதால் மன்ற விதி 17(4)(d) ன் படி மேற்கண்ட மேல்முறையீட்டு மனுவை ஏற்றுக்கொண்டு மின்குறைதீர்ப்பாளர் தீர்வு எதுவும் வழங்க முடியாது என்று தீர்வு செய்யப்படுகிறது.

**10.** **<u>முடிவுரை</u>**

**10.1** இந்த மேல்முறையீட்டாளர் மின்துண்டிப்பு கோரும் மின்இணைப்பு எண் மற்றும் அந்த மின்இணைப்பு எண் வழங்கப்பட்டுள்ள சொத்தின் அனுபவம் சம்பந்தமான வழக்கு நன்னிலம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளதால் மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதித்தொகுப்பின் விதி 17(4)(d)ன் படி மின்குறைதீர்ப்பாளர் மேற்கண்ட மேல்முறையீட்டு மனுவை ஏற்றுக்கொண்டு தீர்வு எதுவும் வழங்க முடியாது என்று தீர்வு செய்யப்படுகிறது.

**10.2** மேற்கண்ட தீர்வுடன் முறையீட்டு மனு எண்.15/2016 முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**(ஆ. தர்மராஜ்)**
மின்குறைதீர்ப்பாளர்

<u>பெறுநர்</u>

1) திரு. S. விசாலாட்சி, B.A.,
க/பெ V.S. சந்தானம், M.sc., M.Phil.,
வெள்ளையனிருப்புத் தெரு,
பூம்புகார்,
நாகப்பட்டிணம்

2) மேற்பார்வை பொறியாளர்,
திருவாரூர் மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
73–c, துர்காலயா ரோடு,
திருவாரூர் – 610 001.

3) தலைவர்,
(மேற்பார்வை பொறியாளர்)
மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம்,
திருவாரூர் மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
73–c, துர்காலயா ரோடு,
திருவாரூர் – 610 001.

4) தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை,
சென்னை – 600 002.

5) செயலாளர்
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை
எழும்பூர்,
சென்னை – 600 008.

6) உதவி இயக்குநர் (கணினி) – **<u>மின் குறைதீர்ப்பாளரின் இணையதளத்தில் வெளியிடுவதற்காக</u>**
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை,
எழும்பூர்,
சென்னை – 600 008.